**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 199** **நாள் : 06.12.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் பருவமழை முன்னெச்சரிக்கை மற்றும் வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகள் தயார்நிலையில் இருப்பதாகவும், பேருந்துசாலைகள் துறையில் நவீன/புதிய நடைமுறைகள் புகுத்தப்பட்டுள்ளதாகவும் இன்று நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பில் ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் பருவமழை முன்னெச்சரிக்கை மற்றும் வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகள் தயார்நிலையில் இருப்பதாகவும், பேருந்துசாலைகள் துறையில் நவீன/புதிய நடைமுறைகள் புகுத்தப்பட்டுள்ளதாகவும் இன்று (06.12.2018) ரிப்பன் மாளிகையில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பின்போது ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போது ஆணையாளர் அவர்கள் பேசும்பொழுது :

பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் வெள்ளத்தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு தயார்நிலையில் உள்ளது. இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையால் இன்று வரை 469.24 மி.மீ. அளவு மழை பெய்துள்ளது. இது எதிர்பார்த்த மழை அளவை விட குறைந்த அளவாகும். பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.21 கோடி செலவில் 1,494 கி.மீ. மழைநீர் வடிகால்கள் தூர்வாரும் பணிகளும், ரூ.15.90 கோடி மதிப்பீட்டில் சிறுபழுதுபார்க்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்கு பருவமழையின்போது, சாலைகளில் தேங்கிய மழைநீர் மற்றும் விழுந்த மரக்கிளைகள் மாநகராட்சி பணியாளர்களால் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கு இடையூறின்றி போக்குவரத்து சரிசெய்யப்பட்டுள்ளது.

2014–2015 பருவமழையின் போது அதிகம் பாதிக்கப்பட்ட 3 அடிக்கு மேல் தண்ணீர் தேங்கும் இடங்கள் இனம் காணப்பட்டன. அதற்கு காரணம், அந்த இடங்களில் மழைநீர் கால்வாய்கள் சேதமடைந்து தண்ணீரை வெளியேற்ற இயலாத நிலையில் இருந்தது. இதுபோன்று 33 இடங்களில் 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்டன. தற்போது இவ்விடங்களில் மழைநீர் தேங்காத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆண்டு வெள்ளத்திற்கு பிறகு, தமிழக அரசு பெருநகர சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப்பகுதிகளில், அடையாறு மற்றும் கூவம் வடிநிலப்பகுதி, கோவளம் வடிநிலப்பகுதி மற்றும் கொஸஸ்தலையாறு வடிநிலப்பகுதிகளில் ரூ.4,034 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டும் திட்டத்தினை அறிவித்தது. இதில், முதற்கட்டமாக, சுமார் 405 கி. மீ. நீளத்திற்கு,

சென்னை மாநகரின் விரிவாக்கப்பகுதிகளான, அம்பத்தூர் மண்டலம், வளசரவாக்கம் மண்டலம் மற்றும் ஆலந்தூர் மண்டலம் பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டுப்பட்டுள்ளன. இதற்கு முன்னால், பலஆண்டுகளாக மழைநீர் தேங்கி பிரச்சனையாக இருந்த இந்தப் பகுதிகளில் மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்ட பிறகு வெள்ளம் தேங்காத நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி நலச் சங்கங்களும், பொதுமக்களும் இந்த திட்டத்தினை மிகவும் பாராட்டுகின்றனர்.

மேலும், இத்திட்டத்தின் கீழ், பாடிக்குப்பம் கால்வாய், நந்தம்பாக்கம் கால்வாய், நொளம்பூர் கால்வாய் மற்றும் அம்பத்தூர்–சிட்கோ கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, அந்தக் கால்வாய்கள் ஆழம் மற்றும் அகலப்படுத்தப்பட்டு அவைகளில் வெள்ளத்தடுப்பு சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்தக் கால்வாய்களின் வெள்ளநீர் கொள்ளவு திறன் மூன்று மடங்கு அதிகரிக்கப்பட்டு, வெள்ளநீர் உடனடியாக வெளியேறி வெள்ளம் தேங்காத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கொடுங்கையூர் கால்வாய், கேப்டன் காட்டன் கால்வாய், எம்.ஜி.ஆர். கால்வாய், ஏகாங்கிபுரம் கால்வாய், வியாசர்பாடி கால்வாய், ஜவஹர் கால்வாய், டி. வி. எஸ். கால்வாய், மாம்பலம் கால்வாய், கிண்டி தொழிற்பேட்டை கால்வாய், ராஜ்பவன் கால்வாய், ரெட்டி குப்பம் கால்வாய் போன்ற 30 சிறிய கால்வாய்களை (micro canals) பராமரித்து வருகிறது. இந்த அனைத்து கால்வாய்களும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள நவீன ரொபோடிக் மண்தோண்டும் இயந்திரம் (Robotic Excavator) மூலம் முறையான கால இடைவெளியில் தூர்வாரப்பட்டு ஆழம் மற்றும் அகலப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கு முன்னர், இத்தகைய இயந்திரங்கள் இல்லாததால், இந்தக் கால்வாய்கள் வண்டல்கள் நிறைந்ததாக இருந்தன. தற்போது இந்த நிலை மாறி தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட ஏதுவாக நவீன இயந்திரங்கள் உள்ளதால் கால்வாய்களின் நிலை மேம்பாடு அடைந்துள்ளது. இதன் மூலம் இந்த 30 கால்வாய்களின் நீரை வெளியேற்றும் அளவும் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் நகர் முழுவதும் வெள்ளம் தேங்குதல் என்பது பெருமளவு குறைந்துள்ளது.

இதேபோல, பின்லாந்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரையிலும் மற்றும் தண்ணீரிலும் செல்லக்கூடிய நவீன இயந்திரம் (Amphibian Vehicle) மூலம், பக்கிங்ஹாம் கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய், ஓட்டேரி நல்லா போன்ற பெரிய கால்வாய்களிலிருந்து (Macro canals) ஆகாயத்தாமரைகள் அகற்றப்பட்டும், அடையாறு மற்றும் கூவம் நதியில் உள்ள ஓடைபாலங்களில் (culverts) உள்ள அடைப்புகள் நீக்கப்பட்டும் நீரோட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் கூவம் நதியின் குறுக்காக 8 இடங்களில் வலைகள் நிறுவப்பட்டு, கூவம் நதியில் மிதக்கும் கழிவுகள் சேகரிக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் அகற்றப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தவின்படி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் வெள்ளத்தடுப்பு பணிகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட 15 இந்திய ஆட்சிப்பணி கண்காணிப்பு அலுவலர்கள் 15 மண்டலங்களிலும், 2016 மற்றும் 2017 பருவமழை

காலத்தின் போது விரிவான கள ஆய்வினை மேற்கொண்டு, மண்டல பொறியாளர்களுடன் கலந்துரையாடல்கள் நடத்திய பின், இந்த 15 மண்டலங்களிலும் சேதமடைந்த மழைநீர் வடிகால்களை இடித்து விட்டு புதிதாக மழைநீர் வடிகால்கள் கட்டவும் மற்றும் இணைப்பு கால்வாய்கள் அமைக்க வேண்டிய பகுதிகளின் பட்டியலையும் அளித்தனர்.

மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited (TNUIFSL)) பெருநகர சென்னை மாநகராட்சியில் விடுபட்ட மழைநீர் வடிகால் இணைப்புகளை (Missing links to Storm Water Drains) கட்டுவதற்கு கள ஆய்வு செய்து, அனைத்து சுரங்கப்பாதைகளையும் சுற்றியுள்ள இடங்களில் வடிகால் முறையினை மேம்பாடு செய்ய ஆய்வு அறிக்கை வழங்க ஒரு கலந்தறிதற்குரியரை நியமனம் செய்தது. அவர்கள் பல இடங்களில் மழைநீர் வடிகால்கள் கட்டும் பணிகளை பரிந்துரை செய்துள்ளனர்.

இதனடிப்படையில் 335 இடங்களில் ரூ.290 கோடி செலவில் விடுபட்ட மழைநீர் வடிகால் இணைப்புகளை கட்டும் பணி, சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட (Chennai Mega City Development Mission (CMCDM) நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரையில் 200 இடங்களில் இந்த பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இந்த பணிகள் கால்வாய் முடியும் பகுதியில் (disposal ends) இருந்து தொடங்கப்படும். இதன் மூலம் வடிகால்களில் சீரான நீரோட்டம் உறுதி செய்யப்படும். தற்போது பருவமழை தீவிரமடைந்துள்ளதால், ஒப்பந்தாரர்கள் பாதுகாப்பு வழிவகைகளுடன் (safety measures) விழிப்புடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும், பணி நடந்துவரும் இடங்களிலும் பணி தொடங்கப்படாத இடங்களிலும் மோட்டார் பம்புகளை தயார்நிலையில் வைத்திருக்குமாறு ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பெரிய அளவில் உள்ள நீர்நிலைகளை சீரமைக்கவும், புதுப்பிக்கவும் பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டு, 210 நீர்நிலைகள் பெருநகர சென்னை மாநகராட்சியினால் புனரமைப்பு செய்யப்பட இனம் காணப்பட்டுள்ளது. இந்த 210 நீர்நிலைகளில் 50 நீர்நிலைகளை புனரமைக்கும் பணி சீர்மிகு திட்ட நிதியின் (Smart City fund) கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 10 நீர்நிலைகள் மூலதன நிதி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புனரமைக்கப்பட்டுள்ளன. சி.ஐ.ஐ (CII), ஈ.எப்.ஐ (EFI), கேர் எர்த் டிரஸ்ட் (Care Earth Trust), சிட்டி கனெக்ட் (City Connect) ஆகிய நிறுமங்களின் சமூக பொறுப்பு நிதி (Corporate Social Responsibility fund)யிலிருந்தும், பிற அரசு சாரா அமைப்புகளின் (NonGovernmental Organizations(NGO)) நிதியிலிருந்தும், சுமார் 30 நீர்நிலைகள் புனரமைக்கபட்டுள்ளன. எஞ்சியுள்ள நீர்நிலைகளை புனரமைக்கும் பணிகள் தமிழ்நாடு நீர் மூலதன கழகத்தின் விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report(DPR)) பெறப்பட்டவுடன் மேற்கொள்ளப்படும். இதனால், இப்பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் அதிகரிக்கும்.

மிதக்கும் கழிவுகளை சேகரிக்க கூவம் ஆற்றின் குறுக்கே 8 இடங்களில் வலைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் இதன் மூலம் சுமார் 240 முதல் 280 டன் வரையில் மிதக்கும் கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன.

அடையாறு, கூவம் நதிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் கால்வாய்களின் கரையோரங்களில் இருந்த 13,923 ஆக்கிரமிப்பாளர்கள் அகற்றப்பட்டு, மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை மாநகரம் கடல் மட்டத்திலிருந்து 1.5 முதல் 2 மீட்டர் உயரம் மட்டுமே உள்ளதாலும், 8 சென்டி மீட்டருக்கும் அதிகமாக மழைபெய்யும் போதும், ஒருசில தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கலாம். ஆனால், பெருநகர சென்னை மாநகராட்சியினால் நிறைவேற்றப்பட்ட மேற்சொன்ன பணிகளின் மூலம் அவ்வாறு தேங்கும் மழைநீர் வெகு விரைவில் வடிந்து விடும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 387.39 கிலோ மீட்டர் நீளமுடைய 471 பேருந்து தட சாலைகளும், 5,525 கிலோ மீட்டர் நீளமுடைய 33,374 உட்புறச் சாலைகளும் பராமரிக்கப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியின் பேருந்துசாலைகள் துறையில் மூலம் நவீன/புதிய நடைமுறைகள் புகுத்தப்பட்டு சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக, 2015–2016ம் நிதியாண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, 168 கிலோ மீட்டர் நீளமுடைய 194 எண்ணிக்கையிலான பேருந்துதட சாலைகள் ரூ.414.59 கோடி மதிப்பீட்டில் சிறந்த தொழில்நுட்பத்துடன் மேம்படுத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக போக்குவரத்து அடர்த்தி (Traffic Density) கணக்கில் கொண்டும், சாலையின் வலிமையை பெங்கிள் மேன் பீம் டிஃப்ளக்ஷன் டெஸ்ட் (BBD Test) சோதனை மூலம் கண்டறிந்து, அதனடிப்படையில் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. ஏற்கனவே உள்ள சாலைகளை புதுப்பிக்கும்பொழுது சாலையின் உயரம் அதிகரிக்காமல் இருக்க, மில்லிங் இயந்திரங்களைக் கொண்டு சாலையினை அகழ்ந்தெடுத்து சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், சாலைகளில் மழைநீர் தேங்காமல் வடியும் வண்ணம் சாய்தளத்துடன் சாலை அமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அமைக்கப்படும் சாலைகளின் தரம் பெருநகர சென்னை மாநகராட்சி தரக்கட்டுப்பாட்டுத் துறை, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL), தரக்கட்டுப்பாட்டு நிபுணர்கள், கலவை பரிசோதனை மையங்கள், கலந்தாளுனர், ஒப்பந்ததாரர்களின் நிலையிலும் பரிசோதிக்கப்படுகிறது.

இச்சாலைகளில் இரவில் மிளிரும் ஸ்டெட்டுகள், போக்குவரத்து சந்திப்புகளில் விபத்தை தடுக்கும் வகையில் மத்திய தடுப்பாண்கள், வழிதட குறியீடுகள், பாதசாரிகளுக்கான சாலைகளை கடக்கும் ஜீப்ரா கிராஸிங் போன்ற பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தியாவிலேயே முதன்முதலாக பெருநகர சென்னை மாநகராட்சியில் பாதசாரிகளின் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் வாகன நெருக்கடி போன்றவற்றை கருத்தில் கொண்டு, இயந்திர

வாகனம் சாரா போக்குவரத்து கொள்கை (Non Motorised Transport) அமல்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நடைபாதைகளில் அனைத்து பாதசாரிகளும் செல்லக்கூடிய வகையில் 10 அடி அகல நடைபாதைகள் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த நடைபாதைகள் பாதசாரிகளும் மாற்றுத்திறனாளிகளும் பயன்படுத்துவதற்கு ஏதுவாக முழு நீளத்திற்கும் 15 செ.மீ. மட்டத்தில் அமைக்கப்படுகிறது. மேலும், சாலைகளின் சந்திப்புகளில் இதே அளவில் இருக்கும் வகையில் டேபிள் டாப் (Table Top) முறையில் நடைபாதைகள் அமைக்கப்பட்டு அவை வேகத்தடைகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

நடைபாதைகளில் வாகனங்களை நிறுத்துவதை தவிர்க்கும் பொருட்டு மிளிரும் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்ட கிரானைட் தடுப்பாண்கள், சேவை நிறுவனங்களின் வடங்கள் செல்வதற்கு ஏற்ப தனிக்குழாய்கள் மற்றும் கான்கிரீட் பெட்டகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. நடைபாதைகளில் இடையூறாக உள்ள சேவை நிறுவனங்களின் பெட்டகங்கள், மின்மாற்றிகளை நடைபாதைகளின் ஓரத்திற்கு மாற்றியமைத்தல் மற்றும் கட்டடங்களின் முகப்பில் வாகனங்கள் செல்வதற்கு ஏதுவாக சாய்தளங்கள் அமைத்தல் போன்ற பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் இதுபோன்று உலகதரத்திலான நடைபாதைகள் 56 பேருந்துதட சாலைகளில் அமைக்கப்பட்டு, இப்பணிகளுக்காக 5 தேசிய விருதுகளும், ஒரு சர்வதேச விருதும் பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது துணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள், முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி அவர்கள், மேற்பார்வை பொறியாளர் (மழைநீர் வடிகால்) திரு.எல்.நந்தகுமார் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**